1987 ஏப்ரல் 29]

கொடுக்கப்படுகிறதா? அரசு அச்சக இயந்திரங்களைப் பயன் படுத்துவதில் இடையூறு ஏதாவது இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பெரிய போஸ்டர்ஸ் அச்சடிக்க அரசு அச்சகம் இல்லை.

கிண்டி அருகே ஜவஹர்லால் நேரு உருவச் சிலை அமைத்தல்.

551—(*வினா எண். 3229) திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிண்டி அருகே கட்டப்பட்டுவரும் ஜவஹர்லால் நேருவின் உருவச் சிலை எப்போது திறந்து வைக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியப் பிரதமர் அவர்களை பண்டித ஜவஹர்லால் நேருவின் சிலையைத் திறந்து வைக்க நேரிடையாக முதலமைச்சர் அவர்கள் அண்மையில் டில்லி சென்றபோது அழைத்திருக்கிறார்கள். பிரதமருடைய தேதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீரங்கம் கோவிலின் சொத்துக்கள்.

552—(*வினா எண். 6351) திரு. துரை அன்பரசன்: மாண்பு மிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் கோவிலுக்கான சொத்துகள் சில தனி நபரிடம் உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் 30-ன் கீழ் சிறு இனாம் நிலங்களை ரயத்து வாரி பட்டா நிலமாக மாற்ற நிலவரித் திட்ட அலுவலரின் தன்னிச்சை விசாரணை மேற்கொள்ளப்பட்டு திருக்கோயிலுக்கு